<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
**<u>MCOP . No.182 /2025</u>**

**<u>நாள் : 18.03.2026</u>**

**ம.சா.** 1 திரு.சக்திவேல்

2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்தில் இறந்துபோன பாரத் எனது மகன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகன் ஸ்பிளண்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தில் போனார் என்றால் சரிதான். அதன் பதிவு எண் TN 83 S 3181 ஆகும். அதன் பதிவு சான்றதிழ் எனது மகன் பெயரில்தான் உள்ளது. மேற்படி வாகனத்தின் பதிவு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு காப்பீடு உள்ளது. அதன் காப்பீட்டு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகனுக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் உள்ளது. சாட்சிக்கு வாய்ப்பளிக்கவே பாரத் பெயரில் உள்ள அசல் ஓட்டுநர் உரிமத்தை முன்னிலைப்படுத்துகிறார். இறந்துபோன பாரத்தின் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் நகல் **நீ.ம.சா.ஆ.1**ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து சம்பந்தமாக எனது மற்றொரு மகன் மோகன் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என் மகன் பாரத் விபத்து சமயத்தில் எலக்டிரிசியனாக வேலை பார்த்து வந்தார். அவரது மாத வருமானம் ரூ.25,000 – ரூ.30,000/- இருக்கும். எனது மகனின் பணி மற்றும் வருவாயை காட்டும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் பாரத் 12ஆம் வகுப்பு முடித்துள்ளதாகதான் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. இறந்துபோன பாரத்துக்கு திருமணம் ஆகவில்லை. நானும், எனது மனைவி மட்டுமே வாரிசுகள் என்றால் சரியல்ல. எனது மற்றொரு மகனான மோகனும் வாரிசுதான். விபத்தில் எனது மகனுக்கு தலையிலும், கன்னத்திலும் ஏற்பட்ட பலத்த காயத்தினால்தான் இறந்தார் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக பெரியமோட்டுரை சேர்ந்த ஆனந்தன் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். விபத்து நடந்த இடத்திற்கு 25 நிமிடத்தில் சென்றுவிட்டேன். அங்கிருந்து கார் மூலமாக திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணியாததால்தான் தலையில் அடிபட்டது என்றால் சரியல்ல. தலைக்கவசம்

அணிந்திருந்தார். அது வண்டியிலேயேதான் இருந்தது. சாட்சி பின்னிட்டு தலைக்கவசம் அணிந்திருந்தாரா இல்லையா என்று தனக்கு தெரியாது என்று கூறுகிறார். எனது மகன் ஓட்டிச் சென்ற வாகனமானது மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதா என்றால் உட்படுத்தப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையை மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை எதிரே வந்த TN 83 R 0995 என்ற பல்சர் இருசக்கர வாகனம் வந்து இடித்து விபத்து ஏற்பட்டதாக மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகன் விபத்து சமயத்தில் பார்சம்பேட்டையிலிருந்து புத்துக்கோவில் நோக்கி சென்றார் என்றால் சரிதான். எதிரில் வந்த வாகனமானது புத்துக்கோவிலிருந்து ஜோலார்பேட்டை நோக்கி வந்தது என்றால் சரிதான். விபத்தானது பார்சம்பேட்டை மேம்பாலத்தின் அடியில் உள்ள சர்வீஸ் ரோட்டில் ஏற்பட்டது என்றால் சரிதான். காவல் துறையினர் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் சர்வீஸ் ரோட்டின் நடுபகுதியில் SOC காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேம்பாலத்தின் ஓரமாக விபத்து நடநத்தாக சாட்சி கூறுகிறார். மேற்படி மேம்பாலத்தின் இருபக்கத்திலும் சர்வீஸ் ரோடு உள்ளது என்றால் சரிதான். விபத்தானது மேம்பாலத்திற்கு கிழக்கு பகுதியில் உள்ள சர்வீஸ் ரோட்டில் நடநத்து. மேம்பாலத்தின் மேற்கு பகுதியில் உள்ள சரவீஸ் ரோட்டில்தான் எனது மகன் சென்றிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. இரு வாகனங்களும் நேருக்கு நேர் மோதிய நிலையில் எனது மகன்தான் தவறான பாதையில் வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தானது மாலை 6.45 மணிக்கு நடந்தது என்றால் சரியல்ல. விபத்து நடந்த நேரம் 6.25 ஆகும். விபத்து பதிவேட்டில் எனது மகன் போதையில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகனுக்கு குடிப்பழக்கம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். விபத்து பதிவேட்டில் smell of alcohol என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரே வந்து மோதிய பல்சர் வாகனத்தின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இலலை என்றால் சரிதான். அதனால் என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று சாட்சி கூறுகிறார். நான் மனுவில் நஷ்ட ஈட்டுத்தொகை ரூ.50,00,000/- கோரியுள்ளேன். மேற்படி தொகை மிகைப்படியானது என்றால் சரியல்ல. அதிலும் பல்சர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இலலாததால் 2ஆம்

**எதிர்மனுதாரர் எவ்வித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல**.

(**மேற்படி குறுக்கு விசாரணையை** 1**ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படடது**)

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.